IN THE COURT OF THE ADDL. DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.168/2021
DEPOSITION OF WITNESS (PW1)

வா.சா.1 சாட்சி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additional District Munsif on 04.02.2025 in accordance with the provisions of Act XX141.**

ஆரம்ப நேரம் : 12.00 Am

**1,2**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் கம்பூட்டர் சாம்பிராணி வைக்கும் தகடு தயாரிக்கும் தொழில் சொந்தமாக வெள்ளாக்குளம் கிராமத்தில் செய்து வருகிறேன். நான் மேற்படி தொழிலை சுமார் 10 வருட காலமாக செய்து வருகிறேன். 2ம் வாதி நரசிம்மபாண்டியன் அரசு பள்ளி ஆசிரியராக திருநகரில் வேலை செய்து வருகிறார். கே.வெள்ளாக்குளம் கிராமம் பிட் 2 தாவாச்சொத்தும் சர்வே எண்.251/4B2, 251/4B6, 251/4B8, சர்வே எண்.251/4B1, 251/4B5, ஆகிய சொத்துக்கள் ஆதியில் 1,2 பிரதிவாதிகளின் தாய்வழி பூட்டியும் 1ம் வாதியின் தாய்வழி பாட்டியுமான ஞானம்மாள் அவர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

2. மேற்படி ஞானம்மாளுக்கு 1)கொண்டம்மாள், 2)லட்சுமியம்மாள், 3)அழகம்மாள், 4)ராமுதாய் ஆகிய நால்வரும் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி கொண்டம்மாள் தான் 1,2 பிரதிவாதிகளின் தாயார் சேஷம்மாளை பெற்றவர் ஆவார் என்றால் சரிதான். தாவாச்சொத்துக்களையும், மேற்படி சர்வே நம்பரில் உள்ள சொத்துக்களையும் ஞானம்மாள் காலத்திற்கு பின்பு மேற்படி நான்கு நபர்களும் வாரிசு கிராம அடிப்படையில் அடைந்து அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான்.

3. மேற்படி லட்சுமியம்மாள் அவர்கள் தான் 1ம் வாதியின் தாயார் என்றால் சரிதான். மேற்படி லட்சுமியம்மாள் காலமான பின்பு நானும் எனது

சகோதரரான ராஜசேகரும் தாவாச்சொத்தில் எங்களுக்கு கிடைக்கப்பெற்ற பாகத்தையும் சர்வே எண்.251/4B2 மற்றும் சர்வே எண்.251/4B6 ஆகியவை பாகமாக கிடைக்கபெற்றும் அனுபவம் செய்து வந்தோம் என்றால் சரிதான். அதேபோன்று அழகம்மாள் வாரிசுகளான நாச்சியார் மற்றும் அமிர்தம் ஆகியோர்களும் தாவாச்சொத்தில் அவர்களுக்கு கிடைக்கப்பெற்ற பாகத்தையும் மற்ற சர்வே எண்ணில் உள்ள சொத்துக்களையும் அடைந்து அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான்.

4. அதேபோன்று 1,2 பிரதிவாதிகள் தாவாச் சொத்தில் அவர்களுக்கு கிடைக்கப்பெற்ற பாகத்தையும் சர்வே எண்.251/4B1, 251/4B5 ஆகியவைகளை பாகமாக கிடைக்கப்பெற்ற சொத்துக்களையும் அடைந்து அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். ராமுத்தாய் அவர்களுக்கு சர்வே எண்.251/4B8ல் கட்டுப்பட்ட சொத்து பாகமாக கிடைக்கபெற்றது என்றால் சரிதான். 2ம் வாதி நரசிம்மபாண்டியன் என்பவர் எங்கள் வழி வாரிசு இல்லை என்றால் சரிதான்.

5. மேற்படி 2ம் வாதி ராமுதாய்க்கு கிடைக்க்பெற்ற சொத்தை கிரையம் வாங்கிய நபர் என்றால் சரிதான். மேற்படி நரசிம்மபாண்டியன் என்பவருக்கு தாவாச்சொத்தினை பொறுத்து எவ்வித உரிமையோ, அனுபவ பாத்தியமோ கிடையாது என்றால் சரிதான். எனக்கு கிடைக்கப்பெற்ற தாவாச்சொத்தும் மற்ற சர்வே எண்களில் உள்ள சொத்திலும் நானும் எனது சகோதரரும் வீடுகள் கட்டியுள்ளோம் என்றால் சரிதான்.

6. மேற்படி வீடுகள் மேற்கு பார்த்த தலைவாசல் உள்ள வீடுகள் என்றால் கிழக்கு பார்த்த வீடுகளாகும். மேற்படி வீடுகள் மேற்கு பார்த்த தலைவாசலும், கிழக்கு பார்த்த தலைவாசலும் உள்ளது என்றால் சரிதான்.

மேற்படி இரண்டு வீடுகளுக்கும் மேற்கு மற்றும் கிழக்கு பக்கங்களில் தென்வடல் பாதை உள்ளது என்றால் சரிதான். மேற்படி பாதைகள் பிராதான சாலையுடன் இணைகிறது என்றால் சரிதான்.

7. அதன்படியே மற்ற வாரிசுகளும் வீடுகள் கட்டியும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவாச்சொத்தில் கிடைக்க்பெற்ற பாகத்திலும் மற்றும் சர்வே எண்.251/4B1 மற்றும் 251/4B5ல் கிடைக்கப்பெற்ற பாகத்தையும் இணைத்து 1,2 பிரதிவாதிகளும் வீடுகள் கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி வீடுகள் வடக்கு பார்த்த தலைவாசல் வைத்து கட்டப்பட்டுள்ளது. மேற்படி வீடுகளுக்கு கிழமேல் பாதை அமைந்துள்ளது என்றால் சரிதான்.

8. தாவாச்சொத்தானது சர்வே எண்.251/4B1, 251/4B5, 251/4B2, 251/4B6, 251/4B8ஆகியவற்றிற்கு இடையில் அமைந்துள்ளது என்றால் சரிதான். தாவாச்சொத்தையும், மேற்படி சர்வே நம்பரில் உள்ள சொத்துக்களையும் அதற்குரிய பாகஸ்தர்கள் அவரவர் விருப்பப்படியும், வசதிக்கு ஏற்பவும் வீடுகள் கட்டி அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவாச்சொத்து பாதை என்பதற்கு காட்டக்கூடிய வருவாய் ஆவணங்களான பட்டா மற்றும் புல வரைபடம் ஆகிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவாச்சொத்தானது ஒருபோதும் பாதையாக பயன்படுத்தவில்லை என்றும், அதன் வருவாய் ஆவணங்களான பட்டா மற்றும் புல வரைபடத்தில் பாதை என்று காட்டப்படவில்லை என்றும், மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

9. தாவாச்சொத்து பாதை என்று எனது சகோதரர் ராஜசேகரோ, மேற்படி ராஜசேகரின் இறப்பிற்கு பின்னர் அவரது வாரிசுகளோ இந்நிர் 1,2 பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யவில்லை. மேலும் இவ்வழக்கில் தரப்பினராகவும் சேரவில்லை என்றால் சரிதான். அதேபோன்று அழகம்மாள் வாரிசுகளோ, ராமுதாயோ, ராமுதாய் வாரிசுகளோ தாவாச்சொத்தினை பொறுத்து இந்நிர் பிரதிவாதிகள் வழக்கு தாக்கல் செய்யவில்லை. இவ்வழக்கிலும் தரப்பினராகவும் இல்லை என்றால் சரிதான்.

10. தாவாச்சொத்தில் பிரதிவாதிகளுக்கு கிடைக்கப்பெற்ற பாகத்தையும் பாகமாக கிடைக்க்பெற்ற மற்ற சர்வே எண்ணில் உள்ள சொத்துக்களையும் இணைத்து வீடு கட்டியதற்கு கள்ளிக்குடி வட்டார வளர்ச்சி அவர்களிடம் முறையாக திட்ட வரைபட அனுமதி பெற்றுதான் கட்டியுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. இந்நிர் 1,2 பிரதிவாதிகள் முறையாக அனுமதி பெற்று தான் கட்டினார்கள். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்நிர் 1,2 பிரதிவாதிகள் பங்காளி தாத்தப்பன் என்றால் சரிதான். அவர் இந்நிர் 1,2 பிரதிவாதிகள் கட்டியுள்ள வீடுகளுக்கு வடக்குப்பக்கமாக குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அவருக்கும் இந்நிர் பிரதிவாதிகளுக்கு இடையே விரோதம் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

11. மேற்படி தாத்தப்பனின் தூண்டுதலின் பேரில் இந்நிர் பிரதிவாதிகளிடமிருந்து எவ்வகையிலோ பணம் பறிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும், மேலும் அவர்களை கஷ்டநஷ்டமும் ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணத்திலும் தாவாச்சொத்தை பாதையாக இல்லாததை பாதை என்று பொய்யாக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

12. இந்நிர் 1,2 பிரதிவாதிகள் கட்டியுள்ள வீடுகளுக்கு முறையாக மின் இணைப்பு பெற்றும், முறையாக வீட்டுவரி இரசீதும் கட்டி வருகிறார்கள் என்றால் சரிதான். திட்ட வரைபட அனுமதியும், மின் இணைப்பும் வீட்டுவரி இரசீதும் முறையாக அரசு வழக்கறிஞரிடம் கருத்துரை பெற்றுதான் அவர்கள் வீடு கட்டி மேற்படி இரசீது பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான்.

13. எக்காலத்திலும் தாவாச்சொத்தானது பாதையாக பயன்படுத்தவில்லை என்றாலும் அரசு வருவாய் ஆவணங்களிலும் அது பாதையாக குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல. எனது வீடுகளுக்கு சென்றுவருவதற்கு கிழக்கேயும் மேற்கேயும் பாதை உள்ளது என்றும், எனவே, வசதியுரிமை சட்டத்தின் கீழ் எனக்கு வழக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தானது பாதையாக இல்லாத நிலையில், அதனை பொறுத்து பாதை என விளம்புகை பரிகாரம் கோரததாலும் உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரியுள்ள நிலையிலும் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கிற்கு வழக்குமூலம்இல்லை என்றால் சரியல்ல. வழக்கை தூய்மையான கரங்களுடன் அணுகவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

/sd/E.Manikandan
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.